Praise the Lord:

எனக்கென்று ஒரு பிரியம், உங்களுக்கென்று ஒரு பிரியம் என்று பல எண்ணங்கள் இருந்தாலும்….
நாம் அனைவருமே தேவன்மேல் பிரியம் வைத்து இங்கு ஒன்றுகூடியிருக்கிறபடியினால் தேவனாகிய கிறிஸ்துவும் நம்மோடு இருக்கிறார்.
நாம் ஜெபிக்க இருக்கிற எந்தக்காரியத்தைக் குறித்தும் நாம் ஒருமனப்படும்பொழுது,
தேவனாலே அதை நமக்கு கிறிஸ்து கொடுக்க வல்லவர். ஆமென்.
தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள நமக்கு எவ்வளவு பிரியம் இருக்கிறதோ,
அதைவிட மேலாக அவருடைய நாமத்தை மகிமைப்படுத்த பிரியப்படுவோம்.

## Let us pray. ..

லூாக்கா/Luke 2:14 (**பக்கம் 79**)

**உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும்**, பூமியிலே சமாதானமும்,
மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்.
Glory to God in the highest, and on earth peace, good will toward men. (KJV)

கிறிஸ்துவின் பிறப்பின்போது, தேவதூதர்கள் துதித்த இந்த வார்த்தையின்படியே, உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையை உண்டாக்கினார் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

தேவன் கிறிஸ்துவுடனேகூட இருந்தபடியினாலும், கிறிஸ்துவும் தேவனுடனேகூட இருந்து,
எப்பொழுதும் தேவசித்தத்தை செய்கிறவராக இருந்து,
அவர் **நன்மை**செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். என்று வேதம் சொல்கிறது. (அப் 10:38)

*தனக்கென்று ஒரு தனிப்பட்ட பிரியம் இல்லாமல் வாழ்ந்ததாலே,*
*கிறிஸ்துவாலே அப்படி செய்யமுடிந்தது.*

அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். (லூக்கா 9:23)

கிறிஸ்துவை பின்பற்றுகிற நாமும் கிறிஸ்துவைப்போலவே, உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையை ஏற்படுத்த, கர்த்தர் நமக்கு உதவவேண்டுமென வாஞ்சிப்போம். ஆமென்.

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா **மகிமை**ப்படும்படியாக, அதைச் செய்வேன். (யோவா 14:13)

நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா **மகிமை**ப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். (யோவா 15:8)

கிறிஸ்து இரகசிய வருகை எந்த நேரமும் இருக்கும் என்பதையும், அதை தேவன் ஒருவரே அறிவார் என்பதையும் நாம் அறிந்தவர்கள்.

இந்த உலகத்தின் ஆசீர்வாதத்தை மேலும் மேலும் பெற்றுக்கொள்ள, நமக்கிருக்கிற வாஞ்சையைவிட மிக மிக அதிகமாக,
பிதா மகிமைப்படும்படியாக, நாம் கிறிஸ்துவின் சீஷராக இருந்து, மிகுந்த கனிகளை கொடுக்க விரும்புவோம். அந்த விருப்பத்தோடு ஓடுவோம். நம்மீது இரக்கமுள்ள தேவன் நமக்கு உதவி செய்வார். ஆமென்.

"நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது." (யோவா 4:34) என்று கிறிஸ்து சொன்னார்,
கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது: (பிலி. 2:4)
என்ற வசனத்தின்படியே நாமும் அதே சிந்தையிலே இருக்கும்போது,
மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை **மகிமை**ப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் உலகத்தார்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. மத் 5:16
என்ற வசனம் நம் ஒவ்வொருவரிலும் ஜீவிக்கும்.

கர்த்தருடைய நாமத்தை சொல்லி துதித்து, பாடி அவரை மகிமைப்படுத்துவதுபோலவே,
கர்த்தருடைய விருப்பத்தை செய்தும் அவரை மகிமைப்படுத்துவோம்.

*நாம் கிறிஸ்துவை தொடர்ந்து பின்பற்றும்படி,.அவர் நமக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். (1 பேதுரு 2:21)*

கிறிஸ்து தாம் சிலுவையிலே நமக்காக மரிப்பதற்கு முன் பிதாவிடம் ஜெபிக்கிறார்:
பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன். (யோவான் 17:4)

அவர் என்னசெய்தாரோ, என்னசெய்யவிரும்பினாரோ, அதே அவருடைய ஜெபமாக இருந்தது.
அவர் விருப்பம், பிதாவின் விருப்பத்தை நிறைவேற்றுவதாகவே இருந்தது. ஆமென்.
நம்முடைய ஜெபமும் நம்முடைய விருப்பமும் அப்படியாக இருக்க கர்த்தர் கிருபை செய்வாராக.

நம்முடைய விருப்பம் அவர் மகிமைக்காக இருக்குமானால்,
அவருடைய சமாதானமும், அவர் நம்மேல் வைத்திருக்கும் பிரியமும் நமக்கு என்றும் சொந்தம்.

மீண்டுமாக லூக்கா/Luke 2:14ஐ வாசியுப்கள்.
உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், **பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்.**
Glory to God in the highest, and on earth peace, good will toward men. (KJV)

கிறிஸ்து மூலமாக உலகத்திற்கு ஏற்பட்ட சமாதானமும் அவர் மக்கள் மீது வைத்த பிரியமும் இந்த உலகத்தில் எப்பொழுதும் இருக்கிறது.
அவர்மேல் விசுவாசம் வைத்து, அவரிடம் பிரியமாக உள்ள நம் அனைவரும் அந்த சமாதானத்தைப் பெற்றதால் இன்று மகிழ்ந்து களிகூறுகிறோம். ஆமென்.

**சமாதான**த்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன்,
என்னுடைய **சமாதான**த்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. (யோவா 14:27)

சமாதானத்தை எல்லோருக்கும் வைத்துப் போயிருக்கிறார்.
அவரை விசுவாசித்து, அவரிடம் வருகிறவர்களுக்கு அவர் அதை கொடுக்கிறார்.
*விசுவாசத்தை துவக்குகிறவரும் அவரே, விசுவாசத்தை முடிக்கிறவரும் அவரே.*

1. ஆதியிலே, தேவனே நேரடியாக மனிதனை வழிநடத்த ஆலோசனை கொடுத்தார்.
   மனிதன் அதை பின்பற்றாமல், பாவத்தில் வீழ்ந்தான்........*அதன்பிறகு*
2. அவருக்குப்பிரியமான மனிதர்கள் மூலம், மீண்டுமாக வழிநடத்த ஆலோசனை கொடுத்தார்.
   அதையும் முழுமையாக பின்பற்றி பாவத்திலிருந்து மீள முடியவில்லை......
   *அப்படியே மனிதனை பாவத்திலே விட்டுவிடாமல்,*
3. தேவனே மனித ரூபத்தில் வந்து, தானே மனிதர்களுக்காக எல்லாவற்றையும் செய்து முடித்தார்.
   "உங்கள்மேல் பிரியம்வைத்து நான் செய்த இந்த புதிய ஏற்பாட்டை, நீங்கள் விசுவாசித்தாலே போதும்." என்று மிகவும் தெளிவாக, மனிதனோட மனிதனாக வாழ்ந்து கிறிஸ்து சொல்லியதை இன்னும் மக்கள் அறியாமல் இருக்கிறார்கள் என்று நினைக்கும்போது வேதனையாக உள்ளது.

சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கிற மக்கள், சரியாக இந்த வேதத்தை அறியும்போது, அவர்களுக்கு தேவன் விசுவாசத்தை உண்டாக்குவார்.
*தேவனுடைய சொல்லிமுடியாத ஈவு. . . இரட்சிப்பு.*
*அது நமக்கு கிடைத்ததுபோல, மற்றவர்களுக்கும் தேவன் கொடுக்க பிரியமாக இருக்கிறார்.*
நமக்கு அவர் கொடுத்த விசுவாசத்தை, காத்து, பூரணப்படுத்துவோம். ஆமென்.

விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து,
கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. (யாக்கோபு 2:22)

இரட்சிப்பு பெற்ற... நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும்,
அவருக்குப் **பிரிய**மானவர்களாயிருக்க நாடுகிறோம். (2கொரி 5:9)

அதற்காக, கர்த்தருக்குப் **பிரிய**மானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள். (எபே 5:10)
*என்ற வசனத்தின்படி, நாம் வேதத்தை தியானித்து கிறிஸ்துவுக்குள் வளர்கிறோம்..*
சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் **பிரிய**முண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், (கொலோ 1:10)

நாம் **விரும்ப வேண்டும்**. அதன்படி ஓடி பிரயாசப்படவேண்டும்.
விளையச்செய்கிற தேவன் நம் பிரயாசத்தை ஆசீர்வதிப்பார். ஆமென்.

நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும். (எசே. 34:26)
என்ற இந்தவருட வாக்குத்தத்தத்தின்படியே ஆசீர்வதிப்பார்.

ஆசீர்வாதமான மழை பெய்தால், அது நமக்குமட்டுமல்ல மற்றவர்களுக்கும் பெய்யும்.
கர்த்தருடைய ஆசீர்வாதத்தினாலே மற்றவர்களும் இரட்சிக்கப்படுவார்கள். ஆமென்.

அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்குமுன்பாகப் **பிரிய**மானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம். (1யோவா 3:22).
என்ற வசனத்தின்படி பெற்றுக்கொள்கிறவர்களாக, கிறிஸ்துமூலமாக தேவனிடத்தில் மன்றாட எழுந்து நிர்ப்போம்.

**Let us PRAY**